DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM
JUDICIAL MAGISTRATE COURT, ANNUR.
Case No.O.S. No. 27/2023

**வா.சா. 1 – ராஜாத்தி த–பெ. பழனிக்கவுண்டர் நாள் – 24.11.2025.**

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதிகள்(1–3, 6,7,9–11,15,21,27–32) தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. 1ம் வாதி காசியப்பன் என் அண்ணன். அவர் தான் எங்கள் குடும்பத்தின் தலைவர் என்றால் சரிதான். இந்த வழக்கினை நான் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்கள் சொத்து எங்களுக்கு வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளேன். எங்கள் சொத்து என்பதை காட்ட வேண்டி என்ன ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பட்டா பாஸ் புத்தகம், சிட்டா ஆகியவை தாக்கல் செய்துள்ளேன். பத்திரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் இந்த சொத்து பரம்பரை சொத்து. அது என் அப்பாவின் அப்பா கருப்பக்கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்து. அதை தான் நாங்கள் கேட்கிறோம் என்று சொன்னால் சரிதான். கருப்பகவுண்டர் இந்த வழக்கு சொத்தினை எந்த வருடம் யாரிடம் இருந்து வாங்கினார் என்பதை பொருத்து ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. கருப்பகவுண்டரின் சொத்தினை தான் நாங்கள் கோருகிறோம் என்று நாங்கள் வழக்கின் வழக்குரையில் கூறியுள்ளோமா என்றால் இல்லை. கருப்பகவுண்டரின் வாரிசு சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் கருப்பகவுண்டருக்கு 5 மகள்கள் 2 மகன்கள். அதில் நான் பழனிக்கவுண்டரின் மகள். அவரது இறப்புச் சான்று மற்றும் வாரிசு சான்று தாக்கல் செய்யவில்லை.

2. தாவா சொத்தின் காலை எண். என்ன என்றால் 778/1B. இந்த் தாவா சொத்து தற்போது எங்கள் சுவாதீனத்தில் உள்ளதா என்றால் வழக்குச் சொத்தில் ஒரு வீடு உள்ளது, அது எங்கள் சுவாதீனத்தில் தான் உள்ளது. அதை காட்டும் வகையில் ஏதேனும் நான் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. க.ச.எண். 778/1Bன் விஸ்தீரணம் 2 ஏக்கரா 75 சென்ட் ஆகும். அதன் செக்குபந்தி தெரியுமா என்றால் 776க்கு தென்புறம், 778/1Aக்கு கிழபுறம், நஞ்சப்பக்கவுண்டர் பூமிக்கு மேல்புறம், வெங்கிடுசாமி பூமிக்கு வடபுறம்.

3. க.ச.எண். 778/1Bல் என்னென்ன தற்போது உள்ளது என்றால் 5 அல்லது 6 வீடுகள் இருக்கும். முந்தைய வீடுகள் எல்லாம் அழிந்து குட்டிச் சுவராக உள்ளது. வழக்குச் சொத்தில் யார் யார் குடியிருக்கிறார்கள் என்றால் வெங்கிடுசாமி, ராமசாமி, நஞ்சம்மாள், ருக்குமணி, வெள்ளிங்கிரி, கந்தன், பழனியம்மாள், சுப்பிரமணி, பழனிச்சாமி, ரவிச்சந்திரன் ஆகியோர் அவர்களது குடும்பத்தாருடன் குடியிருக்கிறார்கள். வழக்குச் சொத்தில் கோவில் உள்ளதா என்றால் மாரியம்மன் கோவில் உள்ளது. ஒரு தண்ணீர் தொட்டி உள்ளது என்றால் சரிதான். அந்த தண்ணீர் தொட்டியின் வாயிலாக தான் க.ச.எண். 778/1Bல் உள்ள வீடுகளுக்கு தண்ணீர் சப்ளை செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். எல்லாருடைய வீடுகளுக்கும் மின் இணைப்பு உள்ளது என்றால் சரிதான். ஆனால் அதற்கு நாங்கள் ஆட்சேபணை கடிதம் கொடுத்துள்ளோம். வழக்குச் சொத்தில் 3 மின்சார பல்ப் வீதி விளக்காக மாட்டப்பட்டுள்ளது.

4. 18 – 32 பிரதிவாதிகளை எதற்காக இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டது என்றால் 18–32 பிரதிவாதிகள் வழக்குச் சொத்தில் குடியிருந்து வருபவர்கள். அதற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது எனக்கு தெரியவில்லை. தற்போது நான் க.ச.எண். 777ல் குடியிருக்கிறேன். வா.சா.ஆ.4 அடங்கலில் வாதிகள் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் என் தந்தை பெயர் பழனிக்கவுண்டர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. என் தந்தை பெயரும் என் தாத்தா கருப்பக்கவுண்டரின் உடன்பிறந்த சகோதரர் பெயரும் பழனிக்கவுண்டர் என்று சொன்னால் சரிதான். க.ச.எண். 778/1B ஊரா என்றால் அது முதலில் ஊராக தான் இருந்தது,அதில் இருந்தவர்கள் தற்போது அவரவர் தோட்டத்திற்கு குடிபெயர்ந்து சென்றுவிட்டார்கள். சிலர் தான் இப்போது குடியிருக்கிறார்கள்.

5. க.ச.எண். 778/1B என்ற காலை கூளேகவுண்டன்புதூர் என்று உள்ளது என்று சொன்னால், பல காலைகள் ஒன்று சேர்ந்தது தான் கூளேகவுண்டன்புதூர் ஆகும், 778/1B மட்டும் அல்ல. இந்த வழக்கின் பிரதிவாதிகள் 22, 24 ஆகியோர் இறந்துவிட்டார்கள் என்றும் அவர்கள் வாரிசுகளை இதில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. கருப்பகவுண்டருக்கு சொத்துரிமை இல்லை என்றும், அதனடிப்படையில் நான் சொத்தினை கோர முடியாது என்று சொன்னால் தவறு. கருப்பகவுண்டரின் மகன் பழனிக்கவுண்டர், நாங்கள் பழனிக்கவுண்டரின் வாரிசுகள் அதனடிப்படையில் சொத்தினை கோருகிறோம். நாங்கள் கருப்பக்கவுண்டருக்கு சொத்துரிமை உள்ளது என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யாத போது சொத்துரிமை நாங்கள் கேட்க முடியாது என்றால் தவறு. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தவறானது என்றும், உரிமையில்லாத சொத்தில் பாகம் கேட்க முடியாது என்றும், ஏற்கனவே இந்த வழக்கு தொடர்பாக ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் இந்த வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றால் தவறு.

6. நாங்கள் 9/288 பங்குரிமை வழக்குச் சொத்தில் கோரியுள்ள போது எதனடிப்படையில் அந்த விகிதாச்சாரம் கோரப்பட்டுள்ளது என்றால் அதை வழக்கறிஞர் சொன்னார், விகிதாச்சரம் எப்படி பிரிப்பது என்று எனக்கு தெரியாது. இந்த பாக பிரிவினை வழக்குதாக்கல் செய்ய எனக்கு உரிமையில்லை என்றால் தவறு. எனவே, செலவு தொகையோடு இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் தவறு.

Sd/- V.Monika
District Munsif cum Judicial Magistrate,
Annur.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.